# வடமாகாணக் கல்வித் திணைக்களம்
## மாதிரி வினாத்தாள்
## கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சை 2019
## General Certificate of Education (Adv.level) Examination 2019

| கணக்கீடு I<br>Accounting I | 33 | T | I | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
|---|---|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :...................................

- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.
- உங்கள் சுட்டெண்ணை மேலே கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டினுள் தெளிவாக எழுதுக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) நிதிக் கணக்கீடு உள்ளீடுகளில் சரியானவை?
   1) வரலாற்றுத் தகவல்கள்   2) எதிர்வு கூறல் தகவல்கள்
   3) கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகள்   4) நிதிக் கூற்றுக்கள்
   5) எல்லைக் கிரயத் தகவல்கள்   (………)

02) பின்வருவனவற்றுள் எது முகாமையாளர் ஒருவருக்கு தேவையான தகவலாக கருதப்படும்.
   1) சம்பளத்தை அதிகரிக்கக் கூடிய இயலுமை நிறுவனத்துக்கு காணப்படுகின்றதா?
   2) பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கான சிறந்த நிலைப்பாடு வணிகத்துக்குள்ளதா?
   3) முதலீட்டுக்கு ஏற்ற திருப்திகரமானஅனுகூலம் கிடைக்கப் பெறுகின்றதா?
   4) எதிர்கால அபிவிருத்திக்கு எடுக்க வேண்டிய தீர்மானங்கள் திட்டங்கள் எவை?
   5) தேவையான நிதி அறிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றவா?   (………)

03) சுமதி வணிகம் ரூ 80000 கிரயமான பொருட்களை ரூ 100, 000க்கு கடனுக்கு விற்பனை செய்தது. இவற்றுள் ரூ 16000 கிரயமான பொருட்கள் வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப் பட்டது. இக் கொடுக்கல் வாங்கல்களின் தாக்கம்.
   1) உரிமையும் சொத்தும் ரூ 20,000 அதிகரிக்கும்.
   2) உரிமையும் சொத்தும் ரூ 8000 அதிகரிக்கும்.
   3) உரிமை ரூ20,000 குறைதல், சொத்து ரூ8000 அதிகரித்தல், பொறுப்பு ரூ 100,000 அதிகரித்தல்.
   4) சொத்தும் பொறுப்பும் ரூ 100,000 குறைவடைதல்.
   5) உரிமையும், சொத்தும் ரூ 16000 அதிகரித்தல்.   (………)

04) வணிக மொன்றின் நிதிநிலைமைக்கூற்றில் எழுதுகருவி உபகரண இருப்புக்களை நடைமுறைச் சொத்தாகவும், அலுவலக உபகரணங்களை நடைமுறை அல்லாத சொத்தாகவும் வெளிப்படுத்துவதுடன் தொடர்புடைய அடிப்படை எண்ணக்கரு.
   1) அட்டுறு எண்ணக்கரு   2) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு   3) கிரய எண்ணக்கரு
   4) பாதுகாப்பு எண்ணக்கரு   5) அலகுசார் எண்ணக்கரு   (……….)

05) நிதியாண்டுக்குரிய வருமானங்களுக்கும் செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடு குறிப்பது.
   1) நிதி நிலைமை   2) நிதி நிலைமை மாற்றம்   3) காசில் ஏற்பட்ட மாற்றம்
   4) நிதிப் பெறுபேறு   5) உரிமையாண்மை மாற்றம்   (……….)

- **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 6, 7ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

அனைத்து காசுப் பெறுவனவுகளும், காசுக் கொடுப்பனவுகளும் வங்கி மூலம் மேற்கொள்ளப்படும் வணிகத்தில் வங்கிக் கூற்றுப்படி மீதி ரூ 32, 000 செலவு மீதியாக காட்டியது. இம் மீதியானது வேறுபட்டமைக்கான ஒரே ஒரு காரணி வசூலிக்கப்படாத காசோலை ரூ 18, 000 ஆகும். மார்ச் மாதத்துக்கான காசுப் பெறுவனவு நாட்குறிப்பேடு, காசுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடு, வங்கிக் கூற்றுத் தகவல்களில் இருந்து திரப்பட்டவை

| | |
|---|---|
| மார்ச் மாத காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் படி மொத்தம் | ரூ 130, 000 |
| மார்ச் மாத காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் படி மொத்தம் | ரூ 115, 000 |
| மார்ச் மாத வங்கிக் கூற்றில் வசூலிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி | ரூ 128, 000 |
| மார்ச் மாத வங்கிக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி | ரூ 102, 000 |

மார்ச் மாத வங்கிக்கூற்றில் உள்ளடக்கி காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியாது விடுபட்டவை.
வருமதியாளரது நேரடி வைப்பு ரூ 9000
வங்கிக் கட்டணம் ரூ 3000

06) 2019 மார்ச் மாதம் மாற்றப்படாத காசோலைகள், வசூலிக்கப்படாத காசோலைகளின் சரியான பெறுமதி முறையே,
1) ரூ 13000, ரூ 2000 2) ரூ 13000, ரூ 20000 3) ரூ 22000, ரூ12000
4) ரூ 16000, ரூ 20000 5) ரூ 13000, ரூ 16000 (……….)

07) 2019 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி யாது?
1) ரூ 71000 2) ரூ 56000 3) ரூ 27000 4) ரூ 22000 5) ரூ 20000 (……….)

08) பெறுமதி சேர்வரிக்காக பதிவு செய்து கொண்டுள்ள அகிலன் வணிகத்தின் திரட்டப்பட்ட 2019 மார்ச் மாத தகவல்கள் பின்வருமாறு,
VAT 10% உள்ளடங்களாக விற்பனைப் பெறுமதி 176 000
கொள்வனவு ரூ 90, 000 VAT 10% கணிக்கப்படல் வேண்டும்.
VAT 10% உள்ளடங்கிய வெளித்திரும்பல் 5500
காசாக செலுத்திய பெறுமதி சேர் வரி 3500
2019 மார்ச் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய VAT கணக்கு மீதி யாது?
1) பொறுப்பு ரூ 7500 2) சொத்து ரூ 4000 3) பொறுப்பு ரூ 4000
4) சொத்து ரூ 5650 5) பொறுப்பு ரூ 5650 (……….)

09) கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் எக்கூற்று சரியானதாகும்.
1) கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றில் செலவு மீதியொன்று இருக்க முடியாது.
2) சகல விற்பனைகளும் விற்பனை நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.
3) விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தமானது கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படும்.
4) சகல கடன்படுநர் ஒவ்வொருவர் தொடர்பிலும் தனித் தனிக் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்படும்.
5) சகல சந்தர்ப்பங்களிலும் கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியானது கடன்படுநர் பேரேட்டு மீதிகளின் மொத்தத்துடன் சமப்படும். (……….)

10) பின்வரும் தகவல்கள் வரையறுக்கப்பட்ட பவித்திரா பொதுக்கம்பனிக்கு உரியது.

| | **2018.08.31** | **2017.08.31** |
|---|---|---|
| சென்மதி மின்சாரம் | 50000 | - |
| முற்பணமாக செலுத்திய வாடகை | 12000 | 80000 |

வருட காலத்தில் காசோலை மூலம் செலுத்திய மின் கட்டணம் ரூ 180, 000 ஆக இருந்தது. அதேவேளை வாடகை மாதாந்தம் ரூ 40,000 வீதம் செலுத்தப்பட்டு வருகின்றது.
2018.08.31 ஆந்திகதியில் முடிவடைந்த வருடத்தில் இலாபநட்டக் கூற்றில் காட்டப்படும் மின்கட்டணம், மற்றும் வாடகையாக செலுத்திய காசு பின்வருமாறு.

| | **மின்சாரம்** | **வாடகை** |
|---|---|---|
| 1) | 180, 000 | 480, 000 |
| 2) | 180, 000 | 520, 000 |
| 3) | 230, 000 | 412, 000 |
| 4) | 230, 000 | 520, 000 |
| 5) | 230, 000 | 440, 000 |

(……….)

11) சுலைமான் வணிகமானது நிறைவாக கணக்கேடுகளை பராமரிக்கவில்லை. இவ் வணிகத்தின் ஏடுகளில் இருந்து 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்காக எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு.

| | |
|---|---|
| 01.04.2018 இல் உள்ளபடி சரக்கிருப்பு | ரூ 38000 |
| கொள்வனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் | ரூ 122000 |
| காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டின் கொள்வனவு நிரலின் மொத்தம் | ரூ 144000 |
| காசுப் பெறுவனவு நாட்குறிப்பேட்டின் விற்பனை நிரலின் மொத்தம் | ரூ 320000 |

குறிப்பு : விற்பனையானது கிரயத்துடன் 25 % இலாபம் சேர்த்து உள்ளடங்கியுள்ளது.
31.03.2019 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதி இருப்பு பெறுமதி யாது?

1) ரூ 68 000 2) ரூ 38 000 3) ரூ 58 000 4) ரூ 48 000 5) ரூ 56 000

(……….)

12) கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் அறிக்கைப்படுத்தும் போது வரலாற்றுக் கிரய எண்ணக்கருவில் இருந்து விலகியிருக்கக்கூடிய சந்தர்ப்பமொன்றாக இனங்காணக்கூடியது.

1) மீள் விற்பனை செய்யும் நோக்கில் பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்யும் போது.
2) ஊழியர் சம்பளத்தினை அறிக்கைப்படுத்தும் போது
3) LKAS – 02 (இருப்பு) நியமத்துக்கு அமைய வருட முடிவில் இருப்பினை மதிப்பிடும் போது.
4) FIFO முறையில் இருப்பினை மதிப்பிடும் போது
5) LKAS – 16 (ஆதனம் பொறி மற்றும் உபகரணம்) நியமத்துக்கு ஏற்ப இயந்திரத்தினை இனங்கண்டு அளவிடும் போது (ஆரம்ப இனங்காணல்) (……….)

13) வணிகமொன்றின் 2019.03.31 ஆந்திகதியில் சரக்கிருப்பு உருப்படிகள் 3 தொடர்பான தகவல்கள் வருமாறு,

| உருப்படி | கிரயம் (ரூபா) | எதிர்பார்க்கப்பட்ட விற்பனை பெறுமதி | எதிர்பார்க்கப்பட்ட விற்பனைச் செலவு (ரூபா) |
|---|---|---|---|
| X | 10000 | 12000 | 1000 |
| Y | 20000 | 18000 | - |
| Z | 5000 | 6000 | 1000 |

LKAS : 2 (இருப்பு) நியமத்துக்கு அமைய உருப்படி அடிப்படையில் நிதிநிலைமைக்கூற்றில் அடையாளப்படுத்தப்பட வேண்டிய இருப்பின் பெறுமதி எவ்வளவு?

1) ரூ 35 000 2) ரூ 36 000 3) ரூ 37 000 4) ரூ 33 000 5) ரூ 32 000

(……….)

14) கமால் வணிகம் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றினையும், அவற்றினை விற்பனை செய்யும் வியாபார நிலையம் ஒன்றினையும் வெவ்வேறாக நடாத்திச் செல்கின்றது. 2019.03.31 இல் வியாபாரத்தில் ஏற்பட்ட தீ காரணமாக பொருட்களின் இருப்பானது அழிவடைந்தது. கணக்கேடுகளில் பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | மூலப்பொருட்கள் (ரூபா) | முடிவுப்பொருட்கள் (ரூபா) |
|---|---|---|
| 01.04.2018 இல் இருப்பு பெறுமதி | 100 000 | 200, 000 |
| மூலப்பொருட்களின் கொள்வனவு | 420 000 | |
| 31.03.2019 இல் இருப்பு பெறுமதி | 50 000 | |

- ✶ நிதியாண்டில் நேர்பொருள் அல்லாத உற்பத்திகளின் கிரயம் ரூ 180000
- ✶ நிதியாண்டுக்கான மொத்த விற்பனை வருமானம். ரூ 900000
- ✶ வணிகமானது உற்பத்திக் கிரயத்தில் 20% இலாபம் வைத்து பண்டங்களை விற்பனை செய்கின்றது.

மொத்த உற்பத்திக் கிரயமும், அழிவுற்ற பொருட்களினதும் பெறுமதியும் முறையே,

1) ரூ 650 000, ரூ 50 000 2) ரூ 650 000, ரூ 100 000 3) ரூ 650 000, ரூ 150 000
4) ரூ 700 000, ரூ 130 000 5) ரூ 700 000, ரூ 100 000 (……….)

15) நிதிக் கூற்றுக்களின் மூலம் முன்வைக்கப்படும் தகவல்களின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அத்தகவல்களை முன்வைப்பதற்கு,

1) பூரணத்துவமுடையதாகவும், நடுநிலைமையும், வழுக்கள் அற்றும் காணப்படல்.
2) உறுதிப்படுத்தக் கூடியதாகவும், காலத்துக்குப் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும்.
3) காலத்திற்கு பொருத்தமானதாகவும், விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் பொருத்தப்பாட்டினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4) உறுதிப்படுத்தக் கூடியதாகவும், காலத்திற்குப் பொருத்தமானதாகவும், வழுக்களற்றதாகவும் காணப்படல் வேண்டும்.
5) ஒப்பிடக் கூடியதாகவும், உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இருத்தல். (……..)

16) இலாப நோக்கற்ற அமைப்பு ஒன்றில் எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு,

31.03.2018 இல் அங்கத்தவர் எண்ணிக்கை 150 ஆகும். இதில் 50பேர் ஆயுட்கால அங்கத்தவர்களாவர். எஞ்சிய அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ 1000 ஆகும். 12 அஙகத்தவர்கள் 2017 / 2018 ம் வருடத்துக்கான அங்கத்துவ கட்டணத்தை செலுத்தவில்லை. 8 அங்கத்தவர்கள் 2018 / 2019 ஆம் ஆண்டுக்கான அங்கத்தவர் பணத்தினையும் செலுத்தி இருந்தனர். ஆயுட் கால அங்கத்துவ கட்டணக்கணக்கின் 2017/ 04/ 01 இல் மீதி ரூ 200,000 ஆகும். இதில் 10% மான தொகை 2017 / 2018 ம் வருடத்தில் அங்கத்துவக் கட்டணமாக வருமான செலவுக் கணக்கிற்கு மாற்றப்படும். வருட ஆரம்பத்தில் நிலுவை அல்லது முற்பண அங்கத்துவக் கட்டணம் எதுவுமில்லை.

2017 / 2018 ஆம் வருடத்தில் வருமானமாக இனங்காண வேண்டிய அங்கத்துவக் கட்டணப் பெறுமதியும், வருடத்தினுள் கிடைக்கப் பெற்ற அங்கத்துவக் கட்டணமும் எவ்வளவு?

| | **வருமானமாக இனம் காணப்பட வேண்டிய பெறுமதி (ரூபா)** | **வருடத்தினுள் கிடைக்கப்பெற்ற அங்கத்துவக் கட்டணம் (ரூபா)** |
|---|---|---|
| 1) | 96 000 | 120 000 |
| 2) | 120 000 | 100 000 |
| 3) | 120 000 | 96 000 |
| 4) | 120 000 | 120 000 |
| 5) | 150 000 | 96 000 |

(……..)

17) பங்குடமை வணிகமொன்றின் கணக்கு வைப்புத் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று / கூற்றுக்கள் எவை?

A - பங்குடமை வணிகத்தின் நன்மதிப்பினை மூலதனக் கணக்கின் ஊடாக சீராக்கும் போது மொத்த உரிமையாண்மை உயர்வடையும்.
B - பங்குடமை வணிகத்திலிருந்து ஓய்வு பெறுகின்ற பங்காளருக்கு செலுத்த வேண்டிய உரிமையினை கடன் கணக்கிற்கு மாற்றும் போது மொத்த உரிமை குறைவடையும்.
C - வணிகத்தின் செலவினை பங்காளர் காசாக செலுத்தும் போது மொத்த உரிமையாண்மையில் எந்த தாக்கமும் ஏற்படாது.

1) B மட்டும் 2) A, B மட்டும் 3) A, C மாத்திரம்
4) B, C மாத்திரம் 5) A, B, C சகலதும் (……..)

18) அருணா, கருணா பங்குடமையின் 2019.03.31 இல் நடைமுறைக் கணக்கு செலவு மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

அருணா (ரூபா) 140, 000
கருணா (ரூபா) 120, 000

2019.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் நடைமுறைக் கணக்கினைத் தயாரிக்கும் போது பின்வருவன தொடர்பில் எந்தவித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எவ்வாறாயினும் வணிகத்தின் வருமானக் கூற்று சரியாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

- ✶ கருணா தனது சொந்தப் பணத்தில் வணிகத்தின் கட்டிட வாடகையாக ரூபா 25 000 இனை செலுத்தியிருந்தார்.
- ✶ அருணா சொந்த வருமான வரி ரூ 12 000 வணிகத்தினால் செலுத்தப்பட்டு இருந்தது.

✶ அருணா, கருணா ஆகியோரின் சம்பளம் தலா ரூ 40 000 நடைமுறைக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

மேலே தரப்பட்டவைகளை திருத்திய பின்னர் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான அருணா, கருணா என்போரின் நடைமுறைக் கணக்கின் சரியான மீதியைக் காட்டும் விடை எது?

| | **அருணா (ரூபா)** | **கருணா (ரூபா)** |
|---|---|---|
| 1) | 148 000 | 205 000 |
| 2) | 168 000 | 185 000 |
| 3) | 205 000 | 123 000 |
| 4) | 205 000 | 148 000 |
| 5) | 205 000 | 275 000 |

(……….)

19) வரையறுத்த பொதுக்கம்பனியொன்றில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

A - ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல்

B - உரிமை வழங்கல் செயற்பாடு இடம்பெறல். சகல உரிமைகளும் பங்குதாரரால் பெறப்பட்டது.

C - இலாபநட்ட கணக்கு மீதியில் இருந்து ஒருபகுதி பொது ஒதுக்கத்துக்கு மாற்றப்படல்.

D - உபகரணம் முதல் தடவையாக மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மிகையொன்று ஏற்படல்.

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் எவை இக்கம்பனியின் உரிமையில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமையும்.

1) A யும், B யும். 2) B யும், D யும் 3) C யும், D யும்

4) A, B, D 5) A, B, C, D எல்லாம் (……….)

20) LKAS – 08 (கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) நியமத்திற்கு அமைய பின்வருவனவற்றுள் கணக்கீட்டு மதிப்பீடு / மதிப்பீடுகளின் மாற்றமாகக் கருதக்கூடியவை எவை?

A - சொத்தொன்றின் பயன்படு ஆயுட்காலம்.

B - இருப்பின் தேறிய நிகரப் பெறுமதி.

C - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைத் தேய்விடும் முறை.

1) A மட்டும் 2) A யும், B யும் 3) A யும், C யும்

4) B யும் C யும் 5) A, B, C எல்லாம் (……….)

21) வரையறுத்த நந்தா கம்பனியின் 2018.04.01 திகதியில் இருந்தவாறான பேரேட்டுக் கணக்கு மீதிகள்.

| | |
|---|---|
| கூறப்பட்ட சாதாரணப் பங்கு மூலதனம் (பங்கொன்று ரூ 30 வீதம்) | 900 000 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 200 000 |
| பொது ஒதுக்கீடு | 200 000 |
| காசு | 100 000 |

2018.04.20 ஆந் திகதி வருட ஆரம்பத்தில் காணப்பட்ட சாதாரணப் பங்குதாரருக்கு 3 : 1எனும் வகையில் ரூ 15 வீதம் உரிமை வழங்கி காசு பெறப்பட்டது. எல்லா உரிமைகளும் பங்குதாரரினால் ஏற்கப்பட்டது.

| | **31.03.2019 இல் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை** | **சாதாரண பங்கு மூலதனம்** | **காசுக்கணக்கு** |
|---|---|---|---|
| 1) | 36 000 | 1200000 | 100 000 |
| 2) | 40 000 | 138000 | 280 000 |
| 3) | 40 000 | 1050000 | 250 000 |
| 4) | 46 000 | 1380000 | 180 000 |
| 5) | 46 000 | 1380000 | 280 000 |

(……….)

22) பின்வரும் சூழ்நிலைகளில் எது / எவை கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகளில் ஒன்றாக இனங்கான இட்டுச் செல்லும்?

A - பழுதடைந்தவைகள் திருத்திக் கொடுக்கப்படும் என்பதற்கிணங்க ஒருவருட உத்தரவாதத்தில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது.

B - வருட இறுதியில் வியாபார கடன்படுநர் மீதியின் மீது ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்படுகிறது.

C - சட்டத் தேவைப்பாடு இல்லாத போதும் உற்பத்தி செய்முறையால் ஏற்படும் சூழல் மாசடைதலினை இயலக்கூடிய அளவிற்கு குறைத்தல் தேவையானதாகும்.

1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) A, C மாத்திரம்
4) B, C மாத்திரம் 5) A, B, C ஆகியன (……...)

23) கம்பனியொன்றின் கணக்காண்டு 31.03.2019 இல் முடிவடைந்தது. இயக்குனர்கள் நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு 30.06.2019 இல் அதிகாரமளித்திருந்தனர். கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம் 15.07.2019 இல் இடம் பெற்றது. கம்பனி தொடர்பான பின்வரும் நிகழ்வுகள் 31.03.2019 க்கு பின்னர் இடம் பெற்றன.

A - 31.03.2019 இல் உள்ளவாறான 250, 000 மீதியுடைய வியாபார வருமதியாளர் ஒருவர் முறிந்தவராக 30.04.2019 இல் பிரகடனப்படுத்தப்பட்டார்.

B - 31.03.2019 இல் ரூ 400 000 மீதியுடைய வியாபார வருமதியாளர் ஒருவர் 10.07.2019 இல் முறிந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டார்.

C - 31.03.2019 இல் உள்ளவாறான ரூ 200 000 கிரயத்தில் மதிப்பிடப்பட்ட சரக்கிருப்பானது 10.04.2019ல் ரூ 150 000 க்கு விற்கப்பட்டது.

D - முதலீடுகளின் சந்தைப் பெறுமதியானது 30.04.2019 இல் இருந்து 30.06.2019 வரையிலான காலப்பகுதியில் ரூ 300 000 இனால் குறைவடைந்தது.

மேற்படி நிகழ்வுகளினால் 31.03.2019 முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்ய வேண்டியவை எவை?

1) A, B ஆகியன 2) A, C ஆகியன 3) B, C ஆகியன
4) A,C,D ஆகியன 5) B,C,D ஆகியன (……...)

24) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்று காசுப் பாய்ச்சல் கூற்றினை முன்வைக்கும் போது நிதிச் செயற்பாட்டின் கீழான காசுப்பாய்ச்சலில் உள்ளடக்கப்படுகின்றவைகளை மாத்திரம் கொண்ட விடை எது?

1) பங்கு வழங்கல், கடன்களை மீள செலுத்துதல், கடன்வட்டி செலுத்துதல்.
2) பங்கு வழங்கல், வருமானவரி செலுத்துதல், பங்குலாபம் செலுத்துதல்.
3) குத்தகை ஆரம்ப வைப்புப்பணம் செலுத்துதல், குத்தகைக் கடன் செலுத்துதல், குத்தகை வட்டிக் கொடுப்பனவு.
4) குத்தகைக் கடன் கொடுப்பனவு செலுத்துதல், கடன் தொகை பெறுதல், பங்குலாபம் செலுத்துதல்.
5) கடன் பெறுதல், பங்குலாபம் செலுத்துதல், பங்குலாபம் கிடைத்தல். (……...)

25) 2019.03.31 இல் சுரேன் கம்பனியின் நடைமுறை விகிதம் 2 : 1 ஆகும். ஏனைய காரணிகள் நிலையாக இருக்கும் போது இவ்விகிதத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தக் கூடிய கொடுக்கல் வாங்கல் எது?

1) கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு
2) கடன்கொடுத்தோருக்கு காசு கொடுத்தல்.
3) நடைமுறை அல்லாத பொறுப்பினை தீர்த்தல்.
4) கடன்படுநர் பொருட்களை திருப்பி அனுப்புதல்.
5) வணிகப் பாவனைக்காக மோட்டார் வான் ஒன்றினை கடனுக்கு கொள்வனவு செய்தல்.

(……...)

26) உற்பத்தி நிறுவனமொன்றின் பின்வரும் கிரயங்களில் எவற்றை நேர்க்கிரயங்களாக வகைப்படுத்தலாம்.

A - உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட கூலி.

B - தொழிற்சாலை முகாமையாளருக்கு செலுத்திய மாதாந்த சம்பளம்.

C - மூலப்பொருட்களை தொழிற்சாலைக்கு கொண்டு வருவதில் ஏற்பட்ட போக்குவரத்துச் செலவு.

D - தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் இயந்திரப் பெறுமானத்தேய்வு.

1) A, B ஆகியன 2) A, C ஆகியன 3) B, C ஆகியன

4) A,B,D ஆகியன 5) A,C,D ஆகியன (……….)

27) கம்பனி ஒன்றின் மூலப்பொருள் X தொடர்பான தகவல்கள் வருமாறு,

| | ஆகக்குறைந்த நுகர்வு | ஆகக்கூடிய நுகர்வு |
|---|---|---|
| நுகர்வு (அலகுகள்) | 2000 | 5000 |
| முதன்மை காலம் (மாதம்) | 5 | 6 |
| உச்சக்கையிருப்பு மட்டம் | 40000 அலகுகள் | |

இம்மூலப் பொருளின் மறுகட்டளை மட்டம், மற்றும் சிக்கனக் கட்டளை தொகையினை காட்டுவது,

| | **மறுகட்டளை மட்டம்** | **சிக்கனக்கட்டளை தொகை** |
|---|---|---|
| 1) | 17500 | 32 500 |
| 2) | 20 000 | 30 000 |
| 3) | 20 000 | 39 500 |
| 4) | 30 000 | 20 000 |
| 5) | 30 000 | 29 500 |

(……….)

28) கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் பொருள் ஒன்றின் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளது.

முதன்மைக் கிரயம் ரூ 600 000

பாதிடப்பட்ட மேந்தலைக் கிரயம் - உற்பத்தி திணைக்களம் ரூ 350 000

சேவைத் திணைக்களம் ரூ 50 000

உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் - 75 000 அலகுகள்

பாதிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் - 50 000 (அலகு ஒன்றிற்கான இயந்திர மணித்தியாலம் = 5)

இயந்திர மணித்தியாலத்துக்கான மேந்தலை உறிஞ்சல் வீதமும், அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயமும் பின்வருவனவற்றுள் எது?

| | **இயந்திர மணித்தியாலமொன்றிற்கான மேந்தலை உறிஞ்சல் வீதம்** | **அலகொன்றிற்கான உற்பத்திக் கிரயம்** |
|---|---|---|
| 1) | 6 | 38 |
| 2) | 7 | 43 |
| 3) | 7 | 15 |
| 4) | 8 | 16 |
| 5) | 8 | 48 |

(……….)

29) கம்பனியொன்று உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கும் பொருள் A தொடர்பிலான உற்பத்தி மட்டமும், மொத்தக் கிரயமும் கீழே தரப்பட்டுள்ளது.

| உற்பத்தி மட்டம் (அலகு) | மொத்தக் கிரயம் (ரூபா) |
|---|---|
| 5000 | 500 000 |
| 6000 | 540 00 |

அலகொன்றிற்கான மாறும் கிரயமும், மொத்த நிலையான கிரயமும் முறையே

| | அலகுமாறும் கிரயம் | மொத்த நிலையான கிரயம் |
|---|---|---|
| 1) | 40 | 200 000 |
| 2) | 40 | 300 000 |
| 3) | 50 | 300 000 |
| 4) | 90 | 200 000 |
| 5) | 100 | 300 000 |

(……….)

30) 5 வருடங்களில் நிறைவடையும் முதலீட்டுத் திட்டம் ஒன்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதி ரூபா 180, 000 நேர் (+) பெறுமதியைக் காட்டுகின்றது. இச் செயற்றிட்டத்தின் தேறிய காசுப் பாச்சல் 10% கழிவு வீதத்தில் கழிவு செய்யப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டம் தொடர்பான சரியான கூற்று எது?

1) செயற்றிட்டத்தின் மொத்த பிரதிபலன் ரூபா 180 000 ஆகும்.
2) செயற்றிட்டத்தின் தேறிய இலாபம் ரூபா 180 000 ஆகும்.
3) செயற்றிட்டத்தின் நிறைவுகாலத்தின் பின் தேறிய இலாபம் ரூபா 180 000 ஆகும்.
4) மூலதனத்தின் கிரயம் 10 % ஐவிட அதிகரித்து ரூபா 180 000 மேலதிக பிரதிபலன் ஒன்றை உழைக்க முடியும்.
5) மூலதனத்தின் கிரயம் 10 % ஐ அகற்றிய பின் ரூபா 180 000 ஆன மேலதிக பிரதிபலன் ஒன்றை உழைக்க முடியும். (………)

(30 x 4 = 120 புள்ளிகள்)

❖ **31 - 50 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

31) வணிகம் ஒன்றில் இடம்பெற்ற பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் எந்த கணக்கீட்டு சூழல் காரணிக்கு உரியது.

(A) தற்போது வணிகத்தில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக்கான கணிணி மென்பொருள் "வைரஸ்" (Virus) காரணமாக நீக்கப்பட்டு புதிய கணிணி மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டது. ………………………………

(B) தமிழ் சிங்களப் புத்தாண்டினை முன்னிட்டு மேலதிக பொங்கல் அரிசிக்கொள்கலன்கள் இரண்டுக்கு பர்மா நாட்டுக்கு கட்டளை அனுப்புதல். ………………………………

(C) அரசானது வரவு செலவுத் திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதிய தொழில் தருநர் பங்களிப்பினை அதிகரித்தமையினால் மேலதிக செலவொன்றினை நிறுவனம் தாங்கிக்கொள்ள வேண்டியிருத்தல். ………………………………

(D) கணக்கீட்டு நியமங்களையும், பட்டயக் கணக்காளரின் ஆலோசனையையும் பெற்று நிதி அறிக்கைப்படுத்தலில் மாற்றத்தினை ஏற்படுத்தல். ………………………………

32) 01.01.2019 ஆந்திகதி இந்திரா கம்பனியானது தனது வழங்குநரான சுந்தரம் கம்பனிக்கு ரூ 15000 பெறுமதியான பண்டங்களை மாதிரிக்கு ஒவ்வாத காரணத்தால் திருப்பி அனுப்பியது. இது தொடர்பான தகவல்கள் இந்திரா கம்பனி ஏட்டிலும், சுந்தரம் கம்பனி ஏடுகளிலும் காட்டப்படும் விதம் (கம்பனிகள் இரண்டும் கட்டுப்பாட்டுக் கணக்கினை பேணுபவை.)

- இந்திராக் கம்பனி ஏடுகளில்
  - அ) உரிய மூல ஆவணம் ………………………………
  - ஆ) உரிய முதன்மை ஏடு ………………………………
- சுந்தரம் கம்பனி ஏடுகளில்
  - அ) வரவு வைக்கும் கணக்கின் பெயர் ………………………………
  - ஆ) செலவு வைக்கும் கணக்கின் பெயர் ………………………………

33) வணிகம் ஒன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன. பொருத்தமான முதன்மை ஏடுகளை குறிப்பிடுக.

1) ரூ 300 000 பெறுமதியான உரிமையாளரின் சொந்த தளபாடங்கள் வணிகத்தில் பயன்படுத்தப்பட்டது. ………………………
2) வருமதியாளரிடம் பெற்ற காசோலை ரூ 12 000 வங்கியில் வைப்புச் செய்தபோது வங்கியால் மறுக்கப்பட்டது. ………………………
3) சில்லறைக்காசாளருக்கு செலுத்திய கட்டுநிதி மீள் நிரம்பல் ரூ2350. ……………………...
4) உரித்து வழங்கல் அடிப்படையில் பெறப்பட்ட காசோலை ரூ30000. ………………………

34) வணிகமொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமை என்பவற்றில் ஏற்படும் தாக்கத்தை "குறையும்" "அதிகரிக்கும்" மாற்றமில்லை என்றவாறு காட்டுக.

| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | உரிமை |
|---|---|---|---|
| 1) அட்டுறு மின்கட்டணத்தை செலுத்துதல் | .................. | .................. | .................. |
| 2) வங்கி மேலதிகப்பற்று உள்ளபோது அறவிட்ட மேலதிகப்பற்று வட்டி | .................. | .................. | .................. |
| 3) ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல். | .................. | .................. | .................. |
| 4) சில்லறைக்காசு கட்டுநிதி மீள்நிரம்பல். | .................. | .................. | .................. |

35) வணிகமொன்றின் சில்லறைக்காசு கட்டுநிதி தொடர்பிலான தகவல்கள் வருமாறு,

| | | |
|---|---|---|
| சில்லறைக்காசுக் கணக்கு மீதி | 2019.01.01 | ரூ 800 |
| | 2019.01.31 | ரூ 400 |
| கட்டுநிதி மீள் நிரப்பல் | 2019.01.01 | ரூ 2200 |

சில்லறைக்காசு கட்டுநிதி மீள் பெறுமதி ரூ 500 ஆல் அதிகரிக்கப்படுமாயின் 2019.02.01ம் திகதியில் மீள் நிரப்பப்படும் தொகை எவ்வளவு? ................................................

36) அனோமா வணிகத்தின் 31.03.2019 இல் காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ 80 000 ஆக காணப்பட்டது. அத்தினத்தில் காசு மீதியும் வங்கிக் கூற்று மீதியும் கீழ்வரும் காரணங்களால் வேறுபட்டன. (எல்லாம் கொடுக்கல் வாங்கல்களும் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.)

- ✶ வியாபார வருமதியாளரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ 20 000 காசோலை மறுக்கப்பட்டது.
- ✶ காசுக்கணக்கில் பதியப்படாத வருமதியாளர் ஒருவரின் நேரடி வைப்பு ரூபா 50 000.
- ✶ கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 80 000 மற்றும் தேறாத காசோலை ரூபா 55 000.
- ✶ வங்கி நிலையான கட்டளையின் பேரில் செலுத்திய நிலையான கட்டளை குத்தகை தவணைக் கொடுப்பனவு ரூ 10 000 காசுக் கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்படவில்லை.

வேண்டப்படுவது :- 31.03.2019 இல் திருத்திய காசு மீதி ................................

31.03.2019 இல் வங்கிக் கூற்று மீதி ................................

37) பின்வரும் நோக்கங்களுக்கு பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களை குறிப்பிடுக.

| நோக்கம் | எண்ணக்கருக்கள் |
|---|---|
| (A) பொருளாதார நடவடிக்கைகளின் பொது அளவு கோல் பணமாகும். | ................................................ |
| (B) நிதிக் கூற்றுக்களுக்கு வணிகத்தின் பெயரைக் குறிப்பிடுதல். | ................................................ |
| (C) விற்பனை வருமானத்தில் இருந்து விற்பனைக் கிரயத்தைக் கழித்தல். | ................................................ |
| (D) கிடைத்த வாடகை வருமானத்துடன் கிடைக்க வேண்டிய வாடகை வருமானத்தினையும் சேர்த்து நிதிக் கூற்றுக்களில் காட்டுதல். | ................................................ |

38) 31.03.2018 இல் வணிகம் ஒன்றில் பரீட்சை மீதியில் எடுக்கப்பட்ட தகவல்கள்.

| | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனை | | 2500 000 |

மேலதிக தகவல்கள்

1) 2018.03.31 மார்ச் மாதத்தில் விற்பனை அல்லது திருப்புக என்னும் அடிப்படையில் ரூ 250 000 பட்டியல் விலை கொண்ட பொருட்கள் அனுப்பப்பட்டிருந்தன. இவை தொடர்பில் ஏடுகளில் எப்பதிவும் செய்யப்படவில்லை. அந்த இருப்பில் 50 % மானவை மாத்திரம் 2018.03.31 இல் விற்பனை செய்யப்பட்டு இருந்ததுடன், விற்பனை விலையானது கிரயத்தில் 25 % இலாபம் சேர்த்து தீர்மானிக்கப்பட்டு இருந்தது. இப் பொருட்கள் திருப்பி அனுப்ப வேண்டிய காலம் முடிவடைந்துள்ளது.
2) 2018.03.31 இல் வணிகத்தில் காணப்பட்ட இறுதிச் சரக்கிருப்பின் பெறுமானம் ரூ 150 000 ஆகும்.

அ) 2018.03.31 இல் முடிவடையும் வருடத்தின் வருமானக் கூற்றில் விற்பனை வருமானமாக காட்டப்பட வேண்டிய தொகை. …………………

ஆ) 2018.03.31 இல் நிதி நிலைமைக் கூற்றில் இறுதிச் சரக்கிருப்பின் பெறுமதி. …………………

- **39, 40 ம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

2017 ஏப்ரல் 01 இல் ரூ 120, 000 மூலதனத்துடன் ஆரம்பித்த வணிகமொன்றில் 31.03.2018, 31.03.2019 இல் நிதி நிலைமைகள் வருமாறு,

| | **31.03.2018** | **31.03.2019** |
|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் | 180, 000 | ? |
| பொறுப்புக்கள் | ? | 50 000 |
| வருமானங்கள் | 50 000 | ? |
| செலவீனங்கள் | 60 000 | 750 00 |

31.03.2018 இல் முடிவடைந்த வருடத்தில் உரிமையாளர் பற்று ரூ 12 000 உம் 31.03.2019 இல் மேலதிக மூலதனம் ஈடுபடுத்தியது ரூ 25, 000 மும் ஆகும்.
31.03.2019 இல் தேறிய சொத்து அதிகரிப்பு ரூ 42, 000.

39) 31.03.2018 இல் உள்ளபடி மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி யாது? …………………………

40) அ) 31.03.2019 இல் உள்ளபடி சொத்துக்களின் பெறுமதி …………………………………

ஆ) 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கு உழைக்கப்பட்ட மொத்த வருமானம்.

…………………………………

41) நிர்மலா Plc நிறுவனம் 2018.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு ரூபா 50 பெறுமதியான 50 000 சாதாரண பங்குகள் வழங்கியது. ரூபா 15 000 பங்கு வழங்கல் செலவு ஏற்பட்டது. முழுப்பணத் தொகையுடன் 70 000 பங்குகளுக்கு விண்ணப்பம் கிடைத்தது. மேலதிக விண்ணப்பங்கள் நிராகரித்து பணம் திருப்பி அனுப்பப்பட்டது.
2017.04.01 இல் காணப்பட்ட மீதிகள்

| | ரூபா |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | 1200 000 |
| நிறுத்திவைத்த வருவாய் | 700 000 |

அ) 2018.03.31 இல் கூறப்பட்ட மூலதன மீதி ரூபா ………………

ஆ) மேற்தரப்பட்ட தகவல் தொடர்பில் 2018.03.31இல் நிறுத்திவைத்த வருவாய் ரூபா …………

42) அ) 1890ம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் பிரிவு 42 இல் கூறப்பட்ட விடயம் யாது?

………………………………………………………..

ஆ) பங்குடமையில் பங்காளர் உரிமைக் கணக்குகள் இரண்டினைப் பெயரிடுக?

……………………………………………………

……………………………………………………

43) கம்பனியொன்றில் பங்கு வழங்கலால் பெற்ற மேலதிக விண்ணப்பங்கள் தொடர்பாக கம்பனி எடுக்கும் தீர்மானங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………

……………………………………………………………………………

44) 2019.03.31 இல் வரையறுக்கப்பட்ட அமுதா கம்பனியின் பரீட்சை மீதித் தகவல்கள் வருமாறு,

| | வரவு (ரூபா) | செலவு (ரூபா) |
|---|---|---|
| காணி | 900 000 | |
| காணி மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 150 000 |

**மேலதிக தகவல்**
இவ்வருடத்தில் மேற்படி காணியானது ரூ 700 000 க்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.
வேண்டப்படுவது.

அ) இக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவு.

…………………………………………..

…………………………………………..

ஆ) ஏனைய விரிவான வருமானங்களின் பொழிப்பு.

…………………………………………..

45) பின்வரும் தகவல்கள் விஸ்வா கம்பனியின் ஏடுகளில் 2019.03.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துடன் தொடர்புடையவை.

| | (ரூபா 000 ல்) |
|---|---|
| ஆண்டுப் பெறுமான தேய்வு | 600 |
| ஆண்டுக்கான இலாபம் | 6400 |
| செலுத்திய வருமான வரி | 1400 |
| ஆண்டு வருமான வரிச்செலவு | 1600 |
| ஆண்டுக்கு செலுத்திய வட்டி | 300 |
| ஆண்டுக்கு சென்மதி வட்டி | 200 |
| காசு தவிர்ந்த நடைமுறை சொத்து அதிகரிப்பு | 1200 |
| நடைமுறைப் பொறுப்பு குறைவு | 800 |
| கொடுத்த செயற்பாட்டு செலவுகள் | 2000 |

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

1) 31.03.2019 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டில் உருவான காசு. …………………………

2) 31.03.2019 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப்பாச்சல்.

…………………………

46) 2018ம் ஆண்டு மே மாதத்திற்குரிய தகவல் வருமாறு.

மே 01 இருப்புக்கள் 80 ரூபாய் வீதம் 60 அலகுகள்

மே 05 கொள்வனவுகள் 90 ரூபாய் வீதம் 40 அலகுகள்

மே 15 கொள்வனவு 100 ரூபாய்வீதம் 50 அலகுகள்

மே 25 விற்பனை 110 அலகுகள்

இருப்புக்களுக்கான விலையிடல் FIFO முறையில் இடம்பெறுமாயின் பின்வருவனவற்றை காண்க.

1) 2018 மே மாத விற்பனைக் கிரயம். ………………………………….

2) 2018 மே 31 இன் இருப்புப் பெறுமதி. ………………………………….

47) சம்பளப்பட்டியல் ஒன்றில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு.

A. ஊழியர்களிடம் அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதி. ரூ 10000

B. தொழில் தருநரின் ஊழியர் சேமலாப நிதிச் செலவீனம் ரூ 15000

மேற்படி A, B நடவடிக்கைகளை பதிவதற்கான நாட்குறிப்பு பதிவினை எழுதுக.

A. ……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

B. ……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

48) ஒரு பொருளின் விற்பனை வருமானம் ரூ 100 அப்பொருளின் மாறும் கிரயம் ரூ 55 ஆகும். இந்த உற்பத்தியின் நிலையான கிரயம் 450 000 ஆகும்.

i) இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனை வருமானம். ………………………….

ii) எதிர்பார்க்கப்பட்ட இலாபம் 225 000 ஆக இருப்பின் பாதுகாப்பு எல்லை பெறுமதி?

………………………….

49) வியாபார நிறுவனமொன்று இயந்திரம் ஒன்றிற்கு ரூ 300 000 முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்றது. மதிப்பீடுகள் பின்வருமாறு,

| **வருடம்** | **1** | **2** | **3** | **4** |
|---|---|---|---|---|
| தேறிய காசுப்பாய்ச்சல் | 90 000 | 120 000 | 180 000 | 150 000 |
| வரிக்குப்பின் இலாபம் | 40 000 | 60 000 | 80 000 | 60 000 |

அ) கணக்கீடு வருவாய் வீதம் …………………………………..

ஆ) மீளப் பெறும் காலம் …………………………………..

50) கம்பனியொன்று புதிய செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கின்றது. அதற்காக காணப்படுகின்ற பல்வேறு மாற்று வழிகளும், அவற்றின் தேறிய நிகழ்காலப் பெறுமதியும் (NPV) கீழே தரப்பட்டுள்ளது. (இச் சகல செயற்றிட்டங்களினதும் ஆரம்ப முதலீடனாது சமமான பெறுமதியைக் கொண்டது.)

| **செயற்றிட்டம்** | **தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)** |
|---|---|
| A | 150 000 |
| B | (50 000) |
| C | 0 |
| D | 200 000 |

அ) கம்பனி தெரிவு செய்ய வேண்டிய செயற்றிட்டம் எது?

………………………………………………………………

ஆ) அச் செயற்றிட்டத்தை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

………………………………………………………………

(20 x 4 = 80 புள்ளிகள்)
(மொத்தம் 200 புள்ளிகள்)

# வடமாகாணக் கல்வித் திணைக்களம்
## மாதிரி வினாத்தாள்
## கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சை 2019
## General Certificate of Education (Adv.level) Examination 2019

| கணக்கீடு II<br>Accounting II | 33 | T | II | மூன்று மணித்தியாலம்<br>Three Hours |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்

- **மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்.**
- **முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**
- **ஒவ்வொரு வினாக்குமான விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.**
- **உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்பட வேண்டும்.**

1) வரையறுக்கப்பட்ட விசாலினி PLC இன் 31.03.2019 இல் முடிவுற்ற ஆண்டுக்காக ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு,

**(ரூ000ல்)**

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| தேறிய விற்பனை | | 18 000 |
| காசும், காசுக்கு சமனானவை | 1 470 | |
| வங்கிக் கடன் வட்டி | 90 | |
| வியாபார வருமதியாளர் | 620 | |
| 31.03.19 ல் சரக்கிருப்பு | 400 | |
| பொது ஒதுக்கீடு | | 600 |
| நிறுத்தி வைத்த வருவாய் (1. 4. 18) | | 200 |
| கட்டட மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 300 |
| வருமான வரி கொடுப்பனவு | 1 400 | |
| வருமான வரி ஏற்பாடு (2017/ 2018) | | 220 |
| கூ/ப சாதாரண பங்கு மூலதனம் | | 5 700 |
| 12 % க/கி கடன் | | 1 000 |
| ஏனைய வருமானம் | | 1 660 |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (மு.கொ.மீதி) | 14 000 | |
| செலவீனங்கள் | 9 700 | |
| | 27 680 | 27 680 |

மேலதிக தகவல்கள்.

1) வங்கி கடன் மீதான இறுதி காலாண்டுக்கான வட்டி சென்மதியாய் உள்ளது.
2) காசும் காசுக்கு சமனானவை என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

| | ரூ (000) |
|---|---|
| காசு கட்டுப்பாட்டு க/கு மீதி | 540 |
| சில்லறை காசு மீதி | 30 |
| திறைசேரி உண்டியல் (3மாத முதிர்வு) | 900 |
| | 1470 |

3) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள வியாபார வருமதியாளர் க/கு மீதியானது ரூ 280 000 கடன் கொடுனர் கட்டுப்பாட்டு க/கு மீதியை கழித்துப் பெறப்பட்டது. வருட இறுதியிலுள்ள வியாபார வருமதியாளர் க/கு மீதியில் வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகள் 10% ஒதுக்கப்படல் வேண்டும்.

4) ஆண்டுக் காலத்தில் பங்கொன்று 20ரூ படியாக 50 000 சா/ர பங்குகள் உரிமை வழங்கீடு செய்யப்பட்டது. அதிலிருந்து பெற்ற காசு முழுவதும் ஏனை யவருமான க/கில் செலவு வைக்கப்பட்டது. எஞ்சிய ஏனைய வருமானம் என்பது கட்டடத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் பெறப்பட்டதாகும்.

5) 2017 / 2018 ம் ஆண்டுக்கான இறுதி காலாண்டுக்குரிய வரி ரூ 180 000 என கொடுப்பனவு செய்யப்பட்டு வருமான வரி கொடுப்பனவுடன் சேர்க்கப்பட்டது. 2018 / 2019ம் வருடத்திற்கான வருமான வரிக்கு வரி கழிக்க முன் இலாபத்தில் 33 1/3 % ஏற்பாடு செய்க?

6) செலவுகள் என்பதனுள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| | ரூ(000) |
|---|---|
| விற்பனைக் கிரயம் | 7000 |
| நிர்வாகக் கிரயம் | 1700 |
| விநியோகக் கிரயம் | 1000 |
| | 9700 |

நிர்வாக கிரயம் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

| | |
|---|---|
| கணக்காய்வு கட்டணம் | 100 000 ரூ |
| இயக்குனர் சம்பளம் | 100 000 ரூ |
| ஊழியர் சேமலாப நிதியச் செலவு | 210 000 ரூ |
| கட்டட தேய்மானம் | 100 000 ரூ |
| கணிணி உபகரண தேய்மானம் | 200 000 ரூ |

விநியோக கிரயம் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

| | |
|---|---|
| வியாபார வருமதிகளின் மதிப்பு குறைப்பு நட்டம் | 400 000 ரூ |
| மோட்டார் வான் தேய்வு | 400 000 ரூ |
| மோட்டார் வான் கா/ தி செலவு – முற்பணம் | 200 000 ரூ |

7) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

(ரூ000ல்)

2019.03.31 இல் உள்ளவாறான விபரம்

| விபரம் | காணி | மோட்டார் வான் | கட்டடம் | கணணி உபகரணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கிரயம் | 4000 | 6000 | 5000 | 2000 | 17000 |
| திரண்ட தேய்வு | - | (2000) | (400) | (600) | (3000) |
| மு.கொ.மீதி | 4000 | 4000 | 4600 | 1400 | 14000 |

கணிணி உபகரணம் 1000 000ரூ ஆகவும், காணி 5000 000ரூ ஆகவும் முதன் முதலாகவும் கட்டடம் இரண்டாந் தடவையாக 4000 000 ரூ ஆகவும் 31.03.2019 ல் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் அவை தொடர்பில் ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

8) பணிப்பாளர் சபை பின்வருவனவற்றை முன் மொழிவு செய்திருந்தனர்.
   அ) ஆண்டுக்கான இலாபத்திலிருந்து ரூ 100 000ஐ பொது ஒதுக்கீட்டுக்கு மாற்றுதல்.
   ஆ) நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல் என்றடிப்படையில் ரூ 300 000 ஐ சா/ர பங்குதாரருக்கு வழங்குதல்.

9) 01.04.2018ம் திகதி அன்று நிதிக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் ரூ 1000 000 நியாயமான பெறுமதியைக் கொண்ட மோட்டார் வாகனம் கொ/வு செய்யப்பட்டது. இது தொடர்பில் ஏடுகளில் எப்பதிவுகளும் இடம் பெறவில்லை. ஆனால் உடன் குத்தகை கொடுப்பனவான (ஆரம்ப குத்தகை தவணைப்பணம்) 200 000ரூ செலுத்தப்பட்டு வி/னை கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

31.03.2019 தொடக்கம் குத்தகை தவணைக்கட்டுப்பணம் 250 000ரூ படி தொடர்ந்து வரும் வருடங்களில் இறுதியில் (4 தவணைகளில்) கொடுப்பனவு செய்யப்படும். ஒவ்வொரு தவணைக் கட்டணத்திலுமுள்ள குத்தகை கடன்வட்டி ரூ 50 000 ஆனது அனைத்து வருடங்களுக்கும் சமனானதாகும். 31.03.19ல் கொடுப்பனவு செய்ய வேண்டிய குத்தகை தவணைக் கட்டணம் (வட்டி உட்பட) இதுவரையில் கொடுப்பனவு செய்யப்படவில்லை.
இந்த மோட்டார் வாகனத்தின் 31.03.19ல் முடிவுற்ற ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு ரூ 200 000 ஏடுகளில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது,

1) 31.03.2019 இல் முடிவுற்ற ஆண்டுக்கான இலாபநட்ட மற்றும் ஏனைய முற்றடக்கிய வருமானக் கூற்று.
2) உரிமையாண்மை மாற்றல் கூற்று.
3) 31.03.2019ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.
4) நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.

2) அ) பின்வருவன ஒரே வகையான பிரயாண பைகளை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றின் தகவல்கள் ஆகும். நடைமுறையாண்டில் இந்நிறுவனம் 25000 பிரயாண பைகளை விற்பனை செய்ய எதிர்பார்க்கின்றது. ஒரு பிரயாணப் பையின் விலை ரூ 800 ஆகும். ஒரு பிரயாணப் பையின் கொள்வனவுக் கிரயம் ரூ 300
எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த நிலையான கிரயம்.

| | |
|---|---|
| சம்பளம் | 2000 000 |
| விளம்பரம் | 1000 000 |
| ஏனைய நிலையான கிரயம் | 2000 000 |
| | 5000 000 |

வேண்டப்படுவது,

1) சமப்பாட்டுப் புள்ளியினை பிரயாணப் பைகளின் எண்ணிக்கையிலும், பெறுமதியிலும் காண்க.
2) பாதுகாப்பு எல்லை அலகுகளிலும், பெறுமதியிலும்.
3) எதிர்பார்க்கப்படும இலாபம்.
4) விற்பனைத் தரகாக பிரயாணப்பை ஒன்றுக்கு ரூ50 அறிமுகப்படுத்தப்பட்டால் ரூபா 4000 000 வருடாந்த இலாபம் ஈட்ட எவ்வளவு பிரயாணப் பைகளை விற்பனை செய்ய வேண்டும்?
5) மேலதிக விளம்பரச் செலவு ரூ 3100 000 ஏற்படுமெனவும் விற்பனை விலை இவ்வாண்டில் 5% அதிகரிக்கும் எனக் கொண்டு இலாபநட்டமற்ற புள்ளியில் பிரயாணப் பைகளின் எண்ணிக்கை. (05 புள்ளிகள்)

ஆ) வரையறுத்த மொரட்டுவ வணிகம் வாடிக்கையாளர் தேவைகளுக்கு அமைய தளபாடங்களை உற்பத்தி செய்கின்றது. இந்நிறுவனத்தில் இரு உற்பத்தி திணைக்களங்கள் A, B யும், C என்ற சேவைத் திணைக்களத்தினையும் கொண்டுள்ளது. கிரய மதிப்பீடுகள் பின்வருமாறு

(ரூ 000ல்)

| | உற்பத்தி கிரய நிலையம் | | சேவைக் கிரய நிலையம் |
|---|---|---|---|
| | A | B | C |
| நேரில் மூலப்பொருட்கள் | 240 | 90 | 15 |
| நேரில் கூலி | 180 | 60 | 10 |
| ஏனைய நேரில் செலவுகள் | 15 | 10 | 5 |

ஏனைய மேந்தலைகள் (000ல்)

இயந்திர சாதனம் மீதான பெறுமானத் தேய்வு 200

வாடகை இறை மின்சாரம் 150

பணியாளர் நலன் பேணல் செலவு 100

பொருத்தமான பிற தகவல்கள்

| | A | B | C |
|---|---|---|---|
| இயந்திர சாதனக் கிரயம் | 1250 | 700 | 50 |
| தளப்பரப்பு (சதுரமீற்றர்) | 30000 | 15000 | 5000 |
| ஊழியர் எண்ணிக்கை | 30 | 15 | 5 |
| நேர் ஊழியர் (மணித்தியாலம்) | 37000 | 33500 | - |

சேவைத் திணைக்களமானது உற்பத்தி திணைக்களங்களுக்கு சமமான விகிதத்தில் சேவை வழங்குகின்றது.

மேற்குறித்த தளபாட உற்பத்தியில் தளபாடம் ஒன்றிற்காக ஏற்பட்ட நேர்செலவுகளின் விபரம்.

நேர்பொருள் - ரூ 650

நேர்கூலி – உற்பத்திக் கிரய நிலையம் A – மணித்தியாலம் மொன்றுக்கு ரூபா 80 படி 8 மணித்தியாலம்.

- உற்பத்தி நிலையம் B – மணித்தியாலமொன்றுக்கு ரூபா 60 படி 6 மணித்தியாலம்.

அலகு ஒன்றுக்கான ஏனைய நேர்செலவு ரூ 30.

உற்பத்தி மேந்தலைகள் நேர்ஊழிய மணித்தியால அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றது.

உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு தளபாடமும் உற்பத்திக்கிரயத்தில் மீது 10% இலாப எல்லை ஒன்று சேர்த்து விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது.

வேண்டப்படுவது,

1) மேந்தலைப் பகிர்வு அட்டவணை (மீள்பகிர்வு உட்பட)
2) இரு கிரய நிலையங்களுமான (A, B) தனித்தனி மேந்தலை உறிஞ்சல் வீதம்.
3) பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக உற்பத்திக்கிரயக் கூற்று. (அலகு ஒன்றுக்கு)
   அ) மூலக்கிரயம்.
   ஆ) உள்ளடக்கப்பட்ட மேந்தலை
   இ) அலகு ஒன்றிற்கான விற்பனை விலை. (10 புள்ளிகள்)

இ) 2019 ஜனவரி தொடக்கம் மே 30 வரையான சுந்தரபவானி உற்பத்தி வாணிபத்தில் இடம்பெற்ற மூலப்பொருள் பெறுவனவு விநியோகம் தொடர்பான தகவல்கள் வருமாறு,

01.01.2019 ரூ10 வீதம் 1000 அலகு கொள்வனவு
10.01.2019 ரூ 10.50 வீதம் 260 அலகு கொள்வனவு
20.01.2019 700 அலகு விநியோகம்.
04.02.2019 ரூ 11.50 வீதம் 400 அலகு கொள்வனவு
21.02.2019 ரூ 12.50 வீதம் 300 அலகு கொள்வனவு
16.03.2019 620 அலகு விநியோகம்.
12.04.2019 240 அலகு விநியோகம்.
10.05.2019 ரூ 11 வீதம் 500 அலகு கொள்வனவு
25.05.2019 380 அலகுகள் விநியோகம்.

வேண்டப்படுவது,

முதல் உள் முதல் வெளி முறையில் (FIFO) முறையில் களஞ்சியப் பேரேட்டினைத் தயாரித்து பின்வருவனவற்றை கணிப்பிடுக.

அ) மொத்தக் கொள்வனவுக் கிரயம்.
ஆ) மொத்த விநியோகக் கிரயம்
இ) இறுதி மூலப்பொருளின் கிரயம். (05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3) அ) எழிலரசி வணிகத்தின் 2019.01.01 இல் நிதி நிலைமைக் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட மீதி வருமாறு,

| | ரூ000 |
|---|---|
| காணி | 1400 |
| விநியோக வான் | 1000 |
| தளபாட இணைப்புக்கள் | 500 |
| வியாபாரச் சரக்கிருப்பு | 165 |
| வியாபார கிடைக்க வேண்டியவை | 135 |
| காசுக் கட்டுப்பாட்டு மீதி | 550 |
| 12% வங்கிக் கடன் | 100 |
| வியாபார சென்மதிகள் | 450 |

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் ஜனவரி மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

1) ரூபா 65 000 பெறுமதியான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
2) ரூபா 80 000 பெறுமதியான பண்டங்கள் ரூ 115 000 இற்கு விற்பனை செய்யப்பட்டதுடன் அதில் ரூபா 75 000 காசாக கிடைக்கப் பெற்றதுடன் எஞ்சியது கடனாகும்.
3) சனவரி மாத கட்டிட வாடகை செலுத்தியது ரூபா 20 000 ஆகும்.
4) ரூபா 100 000 பெறுமதியான வியாபார வருமதியாளரிடம் இருந்து 5% கழிவு கழித்து காசு பெறப்பட்டது.
5) எழிலரசி தனது சொந்த வாகனத்திற்கான வருடாந்த காப்புறுதிக் கட்டணம் ரூ 5000 ஐ வணிகப் பணத்தில் இருந்து செலுத்தினார்.
6) வங்கிக் கடன் தவணைக் கட்டணம் ரூ 6000 ஐ தனது சொந்தப் பணத்தில் இருந்து வணிகம் சார்பில் செலுத்தினார். இதில் உள்ளடங்கியுள்ள கடன்வட்டி ரூ 1000 ஆகும்.

வேண்டப்படுவது,

1. 2019.01.31 இல் முடிவடைந்த மாதத்தில் வணிகத்தில் இடம் பெற்றிருந்த மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் தாக்கங்களை கீழே தரப்பட்டுள்ள சமன்பாட்டில் எழுதிக் காட்டுக.

| மீதியும் இலக்கமும் | சொத்துக்கள் | | | | பொறுப்பு | | உரிமை யாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | வியாபார கிடைக்க வேண்டியவை | சரக்கிருப்பு | காசு | வியாபார கிடைக்க வேண்டியவை | வங்கிக்கடன் | |
| | | | | | | | |
| | | | | | | | |

2. தேறிய சொத்துக்களின் அணுகுமுறையில் சனவரி மாதத்துக்குரிய இலாபம் அல்லது நட்டம். (05 புள்ளிகள்)

ஆ) உபாளி வணிகத்தின் 01.04.2019 இல் உள்ளவாறான சொத்துக்களும் பொறுப்புகளும் வருமாறு, (ரூ000ல்)

| | |
|---|---|
| இயந்திர உபகரணங்கள் | 4250 |
| மோட்டார் வான் | 2750 |
| சரக்கிருப்பு | 3240 |
| வருமதியாளர் கட்டுப்பாட்டுகணக்கு | 3600 |
| காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 1610 |
| வங்கிக் கடன் | 6150 |
| சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 4500 |
| மூலதனம் | ? |

✶ வருமதியாளர் மீதிகளின் அட்டவணை

| | | |
|---|---|---|
| அமல் வியாபாரிகள் | ரூ | 2250 |
| பிமல் ஏற்றுமதியாளர்கள் | ரூ | 1350 |
| | | 3600 |

✶ சென்மதியாளர் மீதிகளின் பட்டோலை

| | | |
|---|---|---|
| பிரதீப் இறக்குமதியாளர் | ரூ | 2925 |
| றுமேஷ் முயற்சிகள் | ரூ | 1575 |
| | | 4500 |

2019 ஏப்ரல் மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களும், நிகழ்வுகளும் வருமாறு

1) காசு கொடுப்பனவுக் கைச்சாத்தில் இருந்து பெறப்பட்டவை.

| | | |
|---|---|---|
| 01.04.2019 | இயந்திரக் கொள்வனவு | 750 |
| 01.04.2019 | தளபாடக் கொள்வனவு | 150 |
| 02.04.2019 | உடமையாளர் பற்று | 1500 |
| 05.04.2019 | நிர்வாகச் செலவு | 900 |
| 10.04.2019 | விநியோக செலவு | 85 |
| 20.04.2019 | கொள்வனவு | 460 |
| 30.04.2019 | மின்சாரம் | 275 |

2) காசு பெறுவனவு பற்றச்சீட்டில் இருந்து எடுக்கப்பட்டவை.

| | | |
|---|---|---|
| 02.04.2019 | காசு விற்பனை | 12000 |
| 07.04.2019 | வாடகை வருமானம் | 2000 |
| 12.04.2019 | மேலதிக மூலதனம் | 200 |

3) மாத காலத்தில் வியாபார வருமதியாளர்களுடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும்.

| வாடிக்கையாளர் பெயர் | கடன் விற்பனை | விற்பனைத் திரும்பல் | பெற்ற தொகை | கொடுத்த கழிவு | அறவிட முடியாத கடன் |
|---|---|---|---|---|---|
| பிமல் ஏற்றுமதியாளர் | 1870 | 65 | 2510 | 12 | 02 |
| அமல் வியாபாரிகள் | 3850 | 55 | 4950 | 18 | |

4) மாத காலத்தில் வியாபார சென்மதியாளர்களுடன் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும்.

| வழங்குனர் பெயர் | கடன் கொள்வனவு | கொள்வனவுத் திரும்பல் | செலுத்தப்பட்ட தொகை | பெற்ற கழிவு |
|---|---|---|---|---|
| பிரதீப் இறுக்குமதியாளர் | 3120 | 125 | 3450 | 44 |
| றுமேஷ் முயற்சிகள் | 2850 | 42 | 1560 | 19 |

வேண்டப்படுவது.

1) முதன்மை ஏட்டுப் பதிவுகள்
2) கடன்படுநர் பேரேடும், கடன்படுநர் அட்டவணையும், கடன்கொடுநர் பேரடும், கடன் கொடுநர் அட்டவணையும்.

3) பொதுப்பேரேட்டில் பின்வரும் கணக்குகள்.
   - கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு
   - கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு
   - காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

- கொள்வனவுக் கணக்கு
- விற்பனைக் கணக்கு
- இயந்திரக் கணக்கு
- தளபாடக் கணக்கு

(15 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4) அ) பின்வரும் நடவடிக்கைகள் யசோ நிறுவனத்தில் 2018 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றவை.

| கடன் பட்டோர் | 01.01.2018 இல் வரவு மீதி | கடன் விற்பனை | பெறுமதி சேர்வரி (10%) | பெற்ற காசு | கொடுத்த கழிவு | அறவிட முடியாக் கடன் |
|---|---|---|---|---|---|---|
| சாளினி | 50000 | 30000 | 3000 | 60000 | 150 | |
| சங்கவி | 20000 | 10000 | 1000 | 24000 | 300 | மீதி முழுவதும் |
| சாம்பவி | 16000 | 16000 | 1600 | 15000 | 600 | |
| சாமினி | 14400 | 20000 | 2000 | 13000 | 280 | 400 |

இந்நிறுவனம் VAT அறவீட்டுக்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதோடு பேரேடுகளை துணைப் பேரேடு, பொதுப்பேரேடு எனவும் பராமரித்து வருகின்றது.

வேண்டப்படுவன.

1) விற்பனை நாட்குறிப்பேடு (பெறுமதி சேர்வரி உட்பட)
2) கடன்படுநர் பேரேட்டில் ஆள்சார் கணக்குகளும், பட்டோலை மீதியும்.
3) பொதுப்பேரேட்டில் அவசியமான கணக்குகள் (கட்டுப்பாட்டுக் கணக்கு உட்பட)

(10 புள்ளிகள்)

ஆ) சந்தியா வியாபாரத்தின் 2019.01.01 ஆந் திகதியின் சில்லறைக் காசுக்கணக்கின் நிதி ரூபா 2000 ஆக இருந்தது.

2019 ஜனவரி மாதத்தில் சில்லறைக் காசாளருடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் வருமாறு,

01.01.2019 இல் சில்லறைக் காசாளருக்கு ரூ 18,000 காசு மீள்நிரப்பப்பட்டது. கொடுப்பனவு விபரம் வருமாறு,

| | | ரூபா |
|---|---|---|
| 05.01.2019 | ஏற்றுக் கூலி | 1000. |
| 08.01.2019 | முச்சக்கரவண்டி வாடகை | 800 |
| 10.01.2019 | சுத்தப்படுத்தல் செலவு | 1100 |
| 14.01.2019 | இறக்கும் கூலி | 900 |
| 16.01.2019 | உரிமைளாயர் எடுப்பனவு | 2000 |
| 18.01.2019 | வாடகைக்கார் கட்டணம் | 1500 |
| 20.01.2019 | சுத்தப்படுத்தல் செலவு | 1200 |
| 22.01.2019 | வழங்குனரான மாலதிக்கு கொடுப்பனவு | 2500 |
| 23.01.2019 | புகையிரத வண்டிச் சீட்டு | 1200 |
| 25.01.2019 | ஏற்றுக் கூலி | 800 |

வேண்டப்படுவது,

1) சில்லறைக்காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேடு.
(ஏற்றிஇறக்குக்கூலி, சுத்தப்படுத்தல், பிரயாணம் மற்றும் ஏனைய கொடுப்பனவு ஆகிய நிரல்களுடன்)
2) சில்லறைக்காசுக் கணக்கும் ஏனைய பேரேட்டுக் கணக்குகளும்.
(பொதுப் பேரேட்டில் காணப்படுகின்றவாறு).

(05 புள்ளிகள்)

இ) பெறுமதி சேர்வரி (VAT) க்காக பதிவு செய்யப்பட்ட வானவில் வணிகத்தின் 2019 மார்ச் 31 இல் பரீட்சை மீதி பின்வருமாறு,

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பெற்ற கழிவு | | 5500 |
| வெளித்திரும்பல் | | 3000 |
| மூலதனம் | | 75000 |
| கடன் கொடுநர் கட்டுப்பாடு | | 42000 |
| விற்பனை | | 132000 |
| VAT கணக்கு மீதி | | 2500 |
| ஆதனம் பொறி உபகரணம் | 55000 | |
| செயற்பாட்டு செலவுகள் | 13000 | |
| 01.04.2018 இல் சரக்கிருப்பு | 15000 | |
| உட்திரும்பல் | 4000 | |
| செலுத்தி VAT | 5000 | |
| கடன்படுநர் கட்டுப்பாடு | 65000 | |
| சில்லறைக்காசு மீதி | 3000 | |
| கொள்வனவு | 77000 | |
| காசுக்கட்டுப்பாட்டு மீதி | 23000 | |
| | 260,000 | 260,000 |

மேலதிக தகவல்கள்.

1) வரவுத்தாள், செலவுத்தாள் என்பவற்றில் 10% பெறுமதி கூட்டல் வரி (VAT) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
2) கொள்வனவு, விற்பனைப் பெறுமானங்களில் 10% VAT உள்ளடங்கியுள்ளமை சீராக்கல் செய்யப்படல் வேண்டும்.

வேண்டப்படுவது,

1. VAT கட்டுப்பாட்டுக் கணக்கு
2. 2019.03.31 இல் இருப்புக்களின் பெறுமானம் ரூ 28000 எனின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபநட்டக் கூற்றினைத் தயாரிக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5) அ) 28.02.2019 இலும் 31.03.2019 இல் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்று வருமாறு.

| | 28.02.2019 | 31.03.2019 |
|---|---|---|
| காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 20 000 | 14 000 |
| (+) சமர்ப்பிக்கப்படாத காசோலை | 8 000 | 12 000 |
| | 28 000 | 26 000 |
| (-) வசூலிக்காத காசோலை | (10 000) | (8 000) |
| வங்கிக் கூற்றின்படி மீதி | 18 000 | 18 000 |

2019 மார்ச் வங்கிக் கூற்றில் எடுக்கப்பட்ட தகவல்கள்

| | |
|---|---|
| வசூலிக்கப்பட்ட / செலவு வைக்கப்பட்டவை | 70000 |
| வரவு வைக்கப்பட்டவை | 65000 |
| நிலையான கட்டளைக் கொடுப்பனவு | 5000 |

தயாரிக்குக.
1) 2019 மார்ச் மாத சுருக்கிய காசுக்கணக்கு
2) 2019 மார்ச் மாதத்திற்கான சுருக்கிய வங்கிக் கூற்று (05 புள்ளிகள்)

ஆ) 31.03.2019 இல் முடிவுற்ற வருடத்துக்கான ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் வருமானக் கூற்று, நிதிநிலைமைக் கூற்று என்பவற்றில் எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு,

**வருமானச் செலவீனக் கூற்று**

| | | | |
|---|---|---|---|
| வருமானங்கள் - | ஆயுள் சந்தா | | 15000 |
| | சந்தா வருமானம் | | 55000 |
| | ஏனையவை | | 35000 |
| | | | 105000 |
| (-) செலவீனங்கள் :- | | | |
| வருமதி சந்தா பதிவளிப்பு | | 2000 | |
| ஏனைய செலவீனம் | | 68000 | (70000) |
| வருமானமிகை | | | 35000 |

**நிதிநிலைமைக் கூற்று**

| | 31.03.2018 | 31.03.2019 |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (மு.கொ.மீதி) | 60 000 | 85 000 |
| வருமதி சந்தா | 10 000 | 15 000 |
| கொள்ளல் கொடுத்தல் கணக்கு மீதி | 20 000 | 95 000 |
| | 90 000 | 195 000 |
| திரண்ட நிதி | 70 000 | 105 000 |
| ஆயுள் சந்தா | 10 000 | 60 000 |
| முற்பணமாக பெற்ற சந்தா | 5 000 | 10 000 |
| அட்டுறு செலவுகள் | 5 000 | 20 000 |
| | 90 000 | 195 000 |

மேலதிக தகவல்கள்
செலவுகளில் நிதிவருடத்துக்கான தேய்மானம் 10000 ஆகும்.
வேண்டப்படுவது,
1) சந்தாக் கணக்கு
2) ஆயுள் சந்தாக் கணக்கு
3) கொள்ளல் கொடுத்தல் கணக்கு (10 புள்ளிகள்)

இ) உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இருந்து மே 2018 மாதத்தில் எடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு,
உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் 1200
ஓரலகு உற்பத்திக்கு எடுக்கும் நேரம் 15 நிமிடங்கள்
ஊழியர்கள் உற்பத்தி செய்த அலகுகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| குகன் | 400 |
| பிரபா | 200 |
| யசோ | 400 |
| சாமி | 200 |

1) மணித்தியாலம் ஒன்றுக்கான கூலி ரூ 100.
2) ஒவ்வொரு 100 அலகு உற்பத்திக்கும் ரூ 2000 மேலதிக படியாக வழங்கப்படும்.
3) ஊழியர் ஒவ்வொருவரிடம் இருந்தும் வருடாந்த நலன்புரிச் சங்கக் கட்டணம் ரூ 1200 மாதாந்த சம தவணைக் கட்டணத்தில் அறவீடு செய்யப்படும்.
4) ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு மொத்தச் சம்பளத்தில் தொழில் தருநர், ஊழியர் முறையே 15%, 10 % ஆகும்.

வேண்டப்படுவது.
1) 2019 மே மாதத்துக்கான சம்பளப்பட்டியல்.
2) சம்பளம் கூலிக்கட்டுப்பாட்டுக் கணக்கு (05 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

6) அ) இலாபநட்டங்களை சமனாக பகிர்ந்து கொள்ளும் ஆரணியும், பூரணியும் சேவை வழங்கும் வியாபாரத்தின் பங்காளர் 01.04.2018ம் திகதி தாரணி என்பவரை புதிய பங்காளராக இணைத்துக் கொண்டனர்.

இவர்களது பங்குடமை ஒப்பந்தம் வருமாறு,

1) ஆரணி, பூரணி, தாரணி முறையே இலாபநட்டங்களை முறையே 3 : 2: 1 என்றவாறு பகிர்வர்.
2) பங்காளர் மூலதனக் கணக்கு மீதிகளுக்கு வருடாந்தம் 12% வட்டினை வருட இறுதியில் கணிப்பிடுதல்.
3) ஆரணி ரூ 40000, பூரணி ரூ 30000, தாரணி ரூ 50000 வீதம் மாதாந்தம் சம்பளம் பெறுவர்.
4) பங்காளரால் மூலதனத்திற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட கடனுக்கு வருடாந்தம் 5% வட்டி வழங்கப்படும்.

2019.03.31 இல் பங்குடமையின் பரீட்சை மீதி (000ல்)

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 14% வட்டியில் நிலையான வைப்பு | 3000 | |
| காசு மீதி | 210 | |
| ஆதனம் பொறி உபகரண வருடத்தேய்வு | 1200 | |
| தாரணி கடன்வட்டி | 60 | |
| சேவை வழங்கல் செலவீனம் | 3750 | |
| அலுவலகச் செலவுகள் | 100 | |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 1100 | |
| 31.03.2019 ஆதனம் பொறி உபகணரங்களின் (தேறியது) | 5000 | |
| செலுத்திய சம்பளங்கள் - ஆரணி | 400 | |
| பூரணி | 280 | |
| தாரணி | 200 | |
| தாரணி மூலதனமாக கொண்டு வந்த காசு | | 400 |
| 01.04.2018 இல் நடைமுறைக் கணக்கு மீதிகள் - ஆரணி | | 200 |
| பூரணி | 100 | |
| 01.04.2018 இல் மூலதனக்கணக்கு மீதி – ஆரணி | | 1200 |
| பூரணி | | 1200 |
| தரகு வருமானம் | | 200 |
| 01.10.2018 இல் பெற்ற கடன் - தாரணி | | 2400 |
| சேவை வருமானம் | | 9800 |
| | 15400 | 15400 |

**மேலதிக தகவல்கள்**

1) தாரணி கீழ்வரும் சொத்துக்களை மூலதனமாக கொண்டு வந்தார்.

| | |
|---|---|
| மோட்டார் வான் | 600 000 |
| காசு | 400 000 |

தாரணி கொண்டுவந்த மோட்டார்வான் கணக்குகளில் இதுவரை பதியப்படவில்லை.

2) ஆதனம் பொறி உபகரணத்தின் கிரயம் மீது வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் தேய்வு இடப்படும்.
3) தாரணி சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தின் பங்குடமையின் நன்மதிப்பு 1200, 000 ஆக மதிப்பிடப்பட்டது. நன்மதிப்புக் கணக்கு எதுவும் பேணாது சீராக்கம் மூலதனக்கணக்கு ஊடாக செய்வது

வேண்டப்படுவது.

1) 2019.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான பங்குடமை வியாபாரத்தின் இலாபநட்டக்கூற்று (பகிர்வு உட்பட)
2) 2019.03.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான பங்காளர் நடைமுறைக் கணக்கு, மற்றும் மூலதனக்கணக்கு.
3) 2019.03.31 ஆந் திகதி நிதி நிலைமைக் கூற்று.

(10 புள்ளிகள்)

ஆ) கீழே தரப்பட்ட தகவல்கள் வரையறுக்கப்பட்ட மாதவி கம்பனியின் நிதிக்கூற்றில் உள்ளதாகும்.

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபநட்டம் மற்றும் முற்றடக்கிய வருமானக் கூற்று ரூ (000) இல்

| | | |
|---|---|---|
| **விற்பனை (கடன்)** | | 1560 |
| (-) விற்பனைக் கிரயம் | | (936) |
| மொத்த இலாபம் | | 624 |
| **ஏனைய வருமானம்** | | |
| பங்குஇலாப வருமானம் | | 51 |
| | | 675 |
| செலவீனங்கள் | | |
| செயற்பாட்டுச் செலவு | 408 | |
| பெறுமானத் தேய்வு | 52 | |
| வட்டிச் செலவீனம் | 70 | |
| மோட்டார் விற்பனை நட்டம் | 5 | (535) |
| வரிகழிக்க முன் இலாபம் | | 140 |
| (-) வருமானவரி | | (45) |
| ஆண்டுக்கான இலாபம் | | 95 |

நிதி நிலைமைக்கூற்று உருப்படிகள்

| | **31.03.2018** | **31.03.2019** |
|---|---|---|
| வியாபார வருமதியாளர் | 540 | 500 |
| வியாபார சரக்கிருப்பு | 162 | 150 |
| முற்பணமாக செலுத்தப்பட்ட செயற்பாட்டு செலவு | 15 | 7 |
| வியாபார சென்மதியாளர் | 566 | 490 |
| சென்மதி வட்டி செலவு | 40 | 10 |
| சென்மதி வருமானவரி | 20 | 15 |

வேண்டப்படுவது :- 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்துக்கான

அ) நேரில் முறையில் அமைந்த செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (செயற்பாட்டு நடவடிக்கை மட்டும்).

ஆ) நேர் முறையில் அமைந்த செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (செயற்பாட்டு நடவடிக்கை மட்டும்).

(05 புள்ளிகள்)

இ) நிறுவனமொன்று அதன் உற்பத்தி இயலலவினை அதிகரிப்பதற்காக பழைய இயந்திரம் ஒன்றினை விற்பனை செய்து விட்டு வினைத்திறன் கூடிய இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்ய உத்தேசிக்கின்றது. புதிய இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் வருமாறு,

| | (000ல்) |
|---|---|
| கொள்வனவு விலை | 2500 |
| பொருத்துதல் கிரயம் | 200 |
| இயந்திர பொருத்துதல் பொறியலாளர் கட்டணம் | 100 |
| இடத்தினை தயார்படுத்தல் கிரயம் | 300 |

பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்பட்டுள்ளன.

1) பழைய இயந்திரத்தினை ரூபா 600 000 க்கு விற்பனை செய்ய முடியும்.
2) புதிய இயந்திரத்தினை கொள்வனவு செய்வதன் காரணமாக தற்போது உள்ள தொழிற்படு மூலதனம் ரூ 100 000 இருந்து ரூ 250, 000 வாக அதிகரிக்கும். அந்த அதிகரிப்பு 4வது வருடத்தில் மீளப்பெறப்படும்.
3) புதிய இயந்திரத்தின் உத்தேச பயன்படு ஆயுட்காலம் 4 வருடங்கள் ஆகும். எஞ்சிய பெறுமதி ரூ 200 000 ஆகவும் காணப்படுகின்றது. பழைய இயந்திரத்தின் உத்தேச பயன்படு காலம் 4 வருடங்களாகவும், எஞ்சிய பெறுமதி எதுவுமற்றதாக காணப்படுகின்றது.
4) எதிர்வரும் நான்கு வருடங்களுக்கான மதிப்பிடப்பட்ட செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சல் பின்வருமாறு, (ரூ000ல்)

| வருடம் | காசுப்பெறுவனவு | | காசுக்கொடுப்பனவு | |
|---|---|---|---|---|
| | பழைய இயந்திரம் | புதிய இயந்திரம் | பழைய இயந்திரம் | புதிய இயந்திரம் |
| 1 | 800 | 1800 | 400 | 600 |
| 2 | 900 | 2300 | 500 | 800 |
| 3 | 900 | 2400 | 600 | 1100 |
| 4 | 800 | 2200 | 550 | 1300 |

5) 4 வருடங்களுக்கான வருடாந்தம் 10% இல் கழிவீட்டுக் காரணி பின்வருமாறு

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| கழிவுக்காரணி | 0.9 | 0.8 | 0.7 | 0.6 |

வேண்டப்படுவது,

1) செயற்றிட்டத்தின் ஆரம்ப தேறிய காசுப்பாச்சல் (உருப்படிகளை வெவ்வேறாக காட்டி)
2) முதலாம் வருடத்தில் இருந்து வருடாந்த தேறிய காசுப்பாச்சல்கள்.
3) புதிய இயந்திரத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)